Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.76/2019

**P.W**.3

| | |
|---|---|
| Name | : திரு.நவீன் |
| Father/Husband Name | : திரு.குமார் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.112022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது வடபட்டடினத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ராமுவை எனக்கு தெரியாது.

2) சுமார் 7 வருடங்களுக்கு முன்பு கூவத்தூரிலிருந்து எனது பாட்டி ஊரான ஆயப்பாக்கத்திற்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக இருசக்கர வாகனம் ஒன்றை நிறுத்தி லிப்ட் கேட்டு வந்து கொண்டிருந்தேன். அப்போது நாங்கள் சென்ற இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளாகியது. அதில் எனக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டது. அதன்பின் நான் மயங்கிவிட்டேன். என்ன நடந்தது என்று தெரியவில்லை. எப்படி விபத்துக்குள்ளாகியது என்றும் தெரியவில்லை. என்னை சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>**சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் கோரப்பட்டு அது நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டு சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.**</u>

கடந்த 14.1.2016 அன்று நல்லூரிலிருந்து எனது வீட்டிற்கு ராமு என்பவரின் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து மாலை 4.00 மணிக்கு நெரும்பூர் – ஆயப்பாக்கம் சாலையில் வந்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். அப்போது எதிரே வந்த டி.வி.எஸ். எக்ஸ் எல் பதிவு எண்.டி.என்.19 இ 8274 என்ற வாகனம் வேகமாக வந்து நான் உட்கார்ந்து சென்ற வாகனத்தின் மீது மோதியது என்றால் அதை கவனிக்கவில்லை. அதில் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்ற ராமு இறந்துவிட்டார் என்றால் அது பற்றி தெரியாது. இந்த விவரத்தை போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக தவறான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.